புலத்கொஹுபிடிய பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்பொன்றிற்குரிய 2020 ஒக்டோபர் 15 முதல் திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 52,989 கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்படாததால் அப் பெறுமானத்தால் பற்றாக்குறை கூடுதலாக காட்டப்பட்டிரருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளிற்காக மீளாய்வாண்டில் செலுத்திய முத்திரை அட்டவணை தயாரிக்கும் கட்டணம் ரூபா 67,700 ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளமை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய கட்டணம் ரூபா 96,800 கணக்கீடு செய்யப்படாததால் தேறிய செலவு கூட்டுத் தொகை ரூபா 29,100 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டண அட்டவணை தயாரிப்பதற்காக செலுத்தவுள்ள ஊக்குவிப்பு தொகையை ஆண்டின் செலவுத் தலைப்பிலிருந்து செலுத்த சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டு செலவுகள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்படவும் மீளாய்வாண்டு செலவுகள் ஆண்டிற்குரியதாக கணக்கீடு செய்யப்படவும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய, நீதிமன்ற தண்டப்பண வருமானத்திலிருந்து செலுத்தப்படும் ஒரு சதவீத ஊக்குவிப்பு படிகள் ரூபா 68,885 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி அமைச்சின் ஏ 9/உ/தட/04/03 இலக்க 2013 திசெம்பர் 19 திகதி சுற்றறிக்கை மூலம் 2014 ஜனவரி 01 திகதி முதல் நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து உள்ளூராட்சி நிறுவனத்திற்கு கிடைக்கும் பணத்திலிருந்து ஊக்குவிப்பு படிகள் செலுத்த பணம் ஒதுக்குதலை இரத்துச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | போலியான பதிலாவதுடன் ஆண்டிற்குரிய செலவுகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் பரிபூரண கிராமம் சமுதாய அடிப்படை கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் மூலம் செய்யப்பட்ட 87 வேலைகளிற்காக அவ் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,639,325 தொகை கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 கணக்குகள் தயாரிக்கும் போது கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | வேலைகளை செயற்படுத்துவதற்காக 07 வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,683,765 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 கணக்குகள் தயாரிக்கும் போது வேலை கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 திகதி தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 1,284,335 ஆன போதும் கணக்குகளில் அது ரூபா 1,174,321 என ரூபா 110,014 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது இதனை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 957,231 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 3,172,460 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி குத்தகை மீதி ரூபா 94,143 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட அல்லது அறவிட முடியாதெனில் பதிவழிக்க உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பதிவழித்தல் மேற்கொள்கையில் ஒழுங்கான செயன்முறையை பின்பற்ற வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 21,260 ஆக காணப்பட்டது. | தொடர்ந்தும் மீதிகள் தொடர்பாக கண்டறிந்து அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பதிவழித்தலிற்கு ஒழுங்கான செயன்முறையை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 3,228,709 தொகை காணப்பட்டது. | இப் பணத்தை பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |